Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.2, SRIVILLIPUTTUR
CC NO.550/20**23**

**Depostitions of PW- 4 Witness for**

| | |
|---|---|
| Name | மணிகண்டபிரபு |
| Father's name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 4th day of January 2024.

Signature of Witness.

<u>04.01.2024</u>

எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

**<u>முதல் விசாரணை–</u>**

நான் தற்போது திருவண்ணாமலையில் குடியிருந்து வருகிறேன். நான் ஆட்டோ ஓட்டும் வேலை செய்து வருகிறேன். அசா.3 சிவகுமார் எனக்கு பழக்கமானவர். என்னிடம் கா ட்டப்படும் ஒப்புதல் வாக்குமுலம மற்றும் அத்தாட்சிகள் 1.2.3.4 ஆகியவைகளில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையதுதான். 12.5.2023ம்தேதி காலை 7.45 மணியளவில் நானும் சிவகுமாரும் திருப்பாற்கடல் பகுதியில் வாக்கிங் சென்று கொண்டிருந்தோம். அப்போது ஆய்வாளர் இசக்கி முத்து என்ற நபரை நாங்கள் இருந்தபோது பிடித்து

விசாரித்துக்கொண்டிருந்தார். அப்போது அந்த நபர் 11.5.2023 ம்தேதி ஒரு பெண்ணிடம் கழுத்திலிருந்து செயினை பறித்து விட்டதாக சொன்னார். அப்போது அந்த நபர் பேண்ட் பாக்கெட்டில் வைத்திருந்த தங்க செயினை எடுத்து ஆய்வாளரிடம் ஒப்படைத்தார். அசா.பொ.1 செயின் அசா1 யிடமிருந்து வாங்கி சாட்சியிடம் அடையாளம் காட்டி கேட்கப்பட்டு பின்னர் அசாபொ.1 செயின் அசா.1 யிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. என்னிடம் காட்டப்படும் அசா.பொ.1 செயின்தான் அந்த நபர் போலிசாரிடம் ஒப்படைத்தார். அந்த நபரை பார்த்தால் அடையாளம் காட்ட முடியும். அந்த நபர் இன்று நீதிமன்றத்திற்கு வரவில்லை. என்னிடம் காட்டப்படும் அசா.பொ.2 ெஉறல்மெட் தான் அந்த நபர் போலிசாரிடம் ஒப்படைத்தார். என்னிடம் காட்டப்படும் அசா.பொ.3 சட்டை மற்றும் அ.சா.பொ.4 ஜீன்ஸ் பேண்ட் ஆகியவற்றை தான் அந்த நபர் அணிந்திருந்தார். என்னிடம் காட்டப்படும் அசா.பொ.5 கத்தியையும் அந்த நபர் போலிசாரிடம் ஆஜர் படுத்தினார். அந்த நபர் போலிசாரிடம் பச்சை நிற இரு சக்கர வாகனத்தையும் ஆஜர்படுத்தினார். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்திலுள்ள டிஎன் 84 ஏ 9309 என்ற பதிவெண் கொண்ட இரு சக்கர வாகனத்தை தான் அந்த நபர் போலிசாரிடம் ஒப்படைத்தார். ஒப்புதல்வாக்குமுலம் மற்றம் அத்தாட்சியில் நானும் சிவகுமாரும் சாட்சியாக கையெழுத்து செய்தோம். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>–

வாய்ப்பு கொடுத்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.